கூடுதல் மாவட்ட நீதிமன்றம், தென்காசி

முன்னிலை:– திரு. எஸ். மனோஜ்குமார், எம்.ஏ., எம்.எல்.,
கூடுதல் மாவட்ட நீதிபதி, தென்காசி.

2025 ஆம் ஆண்டு ஜூலை திங்கள் 29 ஆம் நாள் செவ்வாய்க்கிழமை

**குறிப்பாணை**

அதன்

**அசல் வழக்கு எண்.372/2022**

( CNR No.TNTS01 001199 2022)

பி. சுப்பையா ... வாதி

..எதிர்..

1. பி.எல்.ஜெகநாதன்
2. ஜெய்சர் ஸ்பின்டெக்ஸ் பிரைவேட் லிட்
   அதன் இயக்குநர் பி.எல்.ஜெகநாதன்
3. ஜெயர்சர் ஸ்பின்டெக்ஸ் பிரைவேட் லிட்
   அதன் இயக்குநர் ஜெ.லெட்சுமணன்

... பிரதிவாதிகள்

இந்த குறிப்பாணையானது 25.06.2025 அன்று இந்நீதிமன்றத்தின் முன்பாக இறுதியான விசாரணைக்கு வந்தபோது வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.எம்.சுந்தரேசன் அவர்களும், பிரதிவாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.ஜி. முருகமுரளிதரன் அவர்களும் முன்னிலையாகி நிகழ்த்திய வாதுரைகளைக் கேட்டறிந்தும், ஆவணங்களைப் பரிசீலனை செய்தும் இதுநாள்வரை இந்நீதிமன்றப் பரிசீலணையிலிருந்து இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்

**உத்தரவு**

இந்த குறிப்பாணையானது உரிமையியல் விசாரணை முறைச் சட்டம் கட்டளை 12 விதி 8–ன் கீழ், அசல் வழக்கின் பிரதிவாதிகள் தரப்பில் இக்குறிப்பாணையில் குறிப்பிடப்பட்டுள்ள வங்கிக் கணக்குகள் மற்றும் ஸ்டேட்மெண்டுகள் ஆகியவற்றை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய வாதிக்கு உத்தரவிடக்கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. வாதி தரப்பில், ஏற்கனவே வா.சா.1–ஐ பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு

விசாரணை செய்யும்போது வாதியால், பிரதிவாதிகளுக்கு கொடுக்கப்பட்ட கடன் தொகை ரொக்கமாக வாதி வசம் இருந்து வந்தது என்பதை காண்பிப்பதற்கு எவ்வித ஆவணங்களும் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கவில்லை எனவும், மேற்படி கடன் தொகை வாதியின் வருமான வரி கணக்கில் குறிப்பிடவில்லை எனவும் சாட்சியம் அளிக்கப்பட்டுள்ளதாகவும், எனவே பிரதிவாதிகள் கோரும் ஆவணங்களான வாதியின் வங்கி கணக்கின் கணக்கு நடவடிக்கை பட்டியல்களும், வருமான வரி கணக்குகளும் இவ்வழக்கு நடவடிக்கைக்கோ அல்லது பிரதிவாதிகளின் எதிர்வாதத்திற்கோ எவ்விதத்திலும் தொடர்பில்லாதது என்றும் பதில் கொடுக்கப்பட்டுள்ளது.

3. இரு தரப்பு வாதங்களும் கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டது. பிரதிவாதிகள் தரப்பில், வாதியின் வங்கி கணக்கின் கணக்கு நடவடிக்கை பட்டியல்களையும், வருமான வரி கணக்குகளையும் இந்நீதிமன்றத்தில் வாதி தாக்கல் செய்ய உத்தரவிட வேண்டியது பிரதிவாதிகளின் வழக்கிற்கு அவசியமானது என எடுத்துரைக்கப்பட்டுள்ளதற்கு வாதி தரப்பில் ஆட்சேபணை தெரிவிக்கப்பட்டுள்ளதை கருத்தில்கொண்டு அசல் வழக்கின் ஆவணங்களை பரிசீலனை செய்ததில், வா.சா.1–ன் குறுக்கு விசாரணையின்போது பிரதிவாதிகளுக்கு கொடுக்கப்பட்ட கடன் தொகை ரொக்கமாக வாதி வசம் இருந்து வந்தது என்பதை காண்பிப்பதற்கு எவ்வித ஆவணங்களும் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கவில்லை எனவும், மேற்படி கடன் தொகை வாதியின் வருமான வரி கணக்கில் குறிப்பிடவில்லை எனவும் சாட்சியம் அளிக்கப்பட்டுள்ளது தெரியவருகிறது. மேலும், மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையின் சீராய்வு மனு எண்.CRP (MD) No.1798/2024 and CMP(MD) No.10195/2024–ல் 01,08,2024 ஆம் தேதியன்று பிறப்பிக்கப்பட்ட உத்தரவில், அசல் வழக்கினை விரைந்து விசாரணை மேற்கொண்டு முடித்திட வேண்டுமென்று உத்தரவிட்டுள்ளதை கருத்தில்கொண்டு இந்த அசல் வழக்கானது விசாரணைக்கு உடனடியாக எடுக்கப்பட்டு விரைந்து விசாரணையும் நடைபெற்று வருகிற நிலையில் இந்த குறிப்பாணையின்பேரில் பிரதிவாதிகள் கோரியுள்ள பரிகாரத்தை தற்போது வழங்குவதன் மூலம் அசல் வழக்கின் நடவடிக்கையில் காலதாமதம் ஏற்பட வாய்ப்புள்ளதாக இந்நீதிமன்றம் கருதுகிறது.

முடிவாக, இந்த குறிப்பாணையானது நிராகரிக்கப்படுகிறது.

இந்த உத்தரவானது சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு அவரால் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு பிழைதிருத்தப்பட்டு, 2025 ஆம் ஆண்டு ஜூலை திங்கள் 29 ஆம் நாளான இன்று அவையறியப் பகரப்பட்டது.

MANOJKUMAR S Digitally signed by MANOJKUMAR S Date: 2025.07.30 10:26:47 +0530

கூடுதல் மாவட்ட நீதிபதி,
தென்காசி

**<u>மனுதாரர்கள், எதிர்மனுதாரர் தரப்பு சாட்சி, சான்றாவணங்கள்</u>**

இல்லை

MANOJKUMAR S Digitally signed by MANOJKUMAR S Date: 2025.07.30 10:26:56 +0530

கூடுதல் மாவட்ட நீதிபதி,
தென்காசி

------------------------------------

கூடுதல் மாவட்ட நீதிமன்றம், தென்காசி
குறிப்பாணை
அதன்
அசல் வழக்கு எண்.372/2022
உத்தரவு (நேரிய)
நாள்: 29.07.2025

------------------------------------